JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-5 Witness for Prosecution

CC No. 127/2024 Crime No. Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-5- சக்திவேல் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of November 2025 | | | |

**1ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கூலி வலசில் குடியிருந்து கொண்டு, கட்டிட வேலை செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கு சம்பவங்கள் குறித்து நேரடியாக எதுவும் தெரியாது. சம்பவம் நடைபெற்ற ஒரு நாள் கழித்து சம்பவயிடத்திற்கு வந்த போலீசார் காலை சுமார் 07.00 மணியளவில் சம்பவயிடத்தில் விசாரணை செய்து மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தார்கள். சாட்சி கையொப்பம் கேட்டதால் நானும், என்னுடன் இருந்த மூர்த்தி என்பவரும் பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. முதலாவது சாட்சி கையொப்பம் மூர்த்தியினுடையது. **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அப்போது போலீசார் சண்டை நடைபெற்ற இடத்திலிருந்து ஒரு குச்சியை எடுத்துச் சென்றார்கள். அதற்காக எங்கள் இருவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். முதலாவது சாட்சி கையொப்பம் மூர்த்தியினுடையது. **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 15.09.2024 ஆம் தேதியன்று கிருஷ்ணன் வேலை முடித்து வீட்டிற்கு வந்து கழிவறை

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.04 19:09:10 +0530

செல்ல ஏரிக்கரைக்கு சென்றபோது எதிரிகள் இருவரும் கிருஷ்ணனை வழிமறித்து நீ இந்த வழியாக வரக்கூடாது என்று வாய் தகராறு செய்ததாகவும், பின்னர் அதற்கு கிருஷ்ணன் இது பொது வழி தான் நீங்கள் யார் வரக்கூடாது என்று கூறுவதற்கு என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்து விட்டதாகவும், பின்னர் அன்றைய தினம் இரவு சுமார் 11- 1/4 மணியளவில் கிருஷ்ணன் தனது வீட்டிற்கு வெளியே மின்விளக்கு எரிந்து கொண்டிருந்த மின் கம்பத்தின் அருகில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது அங்கு வந்த எதிரி தனசேகர் அவரை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், சத்தம் கேட்டு நானும், அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் அங்கு சென்று பார்த்தபோது தனசேகர் கிருஷ்ணனை கன்னத்தில் மாறி மாறி அறைந்து கொண்டிருந்ததாகவும், அவருடன் வந்த குப்புசாமி கிருஷ்ணனை பார்த்து உனக்கு எத்தனை தடவை சொல்றது என்று தகாத வார்த்தைகளால் திட்டி கிருஷ்ணனின் நெஞ்சில் எட்டி உதைத்ததாகவும், கிருஷ்ணன் நிலை தடுமாறி தனது வீட்டின் முன்பிருந்த சாக்கடையில் இடது கையை ஊன்றி கீழே விழுந்து விட்டதாகவும், அதில் அவருக்கு இடது கை மணிக்கட்டு அருகே பலத்த காயம் ஏற்பட்டதாகவும் அப்போது குப்புசாமி அருகில் கிடந்த கட்டையை எடுத்து கிருஷ்ணனுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அப்போது தனசேகரனின் அப்பா மாடசாமி ஓடி வந்து கட்டையை குப்புசாமியிடம் இருந்து பிடுங்கிக் கொண்டதாகவும், மேற்படி சம்பவங்கள் அனைத்தையும் நானும், நேரில் பார்த்ததாகவும், பின்னர் கிருஷ்ணனை அவரது அப்பா சிகிச்சைக்காக அந்தியூர் அரசு மருத்துவமனை அழைத்துச் சென்றதாகவும், அங்கிருந்து பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.04 19:09:20 +0530

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-4 Witness
for Prosecution

CC No. 127/2024 Crime No. Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-4-சின்னதுரை | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of November 2025 | | | |

**1ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தோட்டக்குடியாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். 1ம் எதிரி தனசேகர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். 2ம் எதிரி குப்புசாமி 1 ம் எதிரியின் உறவினர் ஆவார். எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். 1 ம் எதிரி ஆஜர் இல்லை. அ.சா.1 கிருஷ்ணன் எனது பக்கத்து வீட்டுக்காரர். தேதி, மாதம் நினைவில்லை, கடந்த 1 வருடம் 2 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு நான் எனது வீட்டில் இருந்தபோது சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்தபோது அ.சா.1 கிருஷ்ணனின் வீட்டின் முன்னால் கிருஷ்ணனை குப்புசாமி காலால் எட்டி உதைத்து கொண்டு இருந்தார். பின்னர் கிருஷ்ணனின் அப்பா வந்து தடுத்து விட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேன் என்றால், சரிதான். முதல் விசாரணையில் சொன்ன சங்கதியை தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் சம்பவம் நடந்து முடிந்த பின்பு தான் சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால், சரியல்ல. சம்பவம் நடந்து கொண்டு இருக்கும் போது நான் சென்றேன். கிருஷ்ணன் எனது உறவினர் என்றால்,

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.04 19:09:27 +0530

சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது, போல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நான் பார்க்கவில்லை என்றாலும், கிருஷ்ணன் எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. கிருஷ்ணன் என்பவருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.04 19:09:35 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness for Prosecution

CC No. 127/2024 Crime No. Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-3-சாந்தி (எ) தனலட்சுமி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of November 2025 | | | |

**1ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தோட்டக்குடியாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, இல்லத்தரசியாக உள்ளேன். எதிரிகள் தனசேகரன் மற்றும் குப்புசாமி இருவரையும் எனக்கு தெரியும். இருவரும்எங்களது ஊரைச் சேர்ந்தவர்கள். அ.சா.1 கிருஷ்ணன் எனது தம்பி ஆவார். 16.09.2024 தேதியன்று இரவு சுமார் 11.00 மணியளவில் நான் எனது வீட்டில் எனது கணவருடன் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்தபோது அ.சா.1 ன் வீட்டில் இருந்துதான் சத்தம் வந்ததாக தெரிந்தது. அங்கு சென்று விசாரித்தபோது எதிரிகள் இருவரும் அங்கு வந்து அ.சா.1 உடன் பிரச்சினை செய்து சென்று விட்டதாக அ.சா.1 ன் அப்பா என்னிடம் கூறினார். நான் மேற்படி சம்பவங்கள் எதையும் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 15.09.2024 ஆம் தேதியன்று கிருஷ்ணன் வேலை முடித்து வீட்டிற்கு வந்து கழிவறை செல்ல ஏரிக்கரைக்கு சென்றபோது எதிரிகள் இருவரும் கிருஷ்ணனை வழிமறித்து நீ இந்த வழியாக வரக்கூடாது என்று வாய் தகராறு செய்ததாகவும், பின்னர் அதற்கு கிருஷ்ணன் இது பொது வழி தான் நீங்கள் யார் வரக்கூடாது என்று கூறுவதற்கு என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்து விட்டதாகவும், பின்னர் அன்றைய தினம் இரவு சுமார் 11- 1/4 மணியளவில் கிருஷ்ணன் தனது வீட்டிற்கு வெளியே மின்விளக்கு எரிந்து கொண்டிருந்த மின் கம்பத்தின் அருகில் நின்று

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.04 19:09:42 +0530

கொண்டிருந்ததாகவும், அப்போது அங்கு வந்த எதிரி தனசேகர் அவரை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், சத்தம் கேட்டு நானும், எனது கணவரும் மற்றும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் அங்கு சென்று பார்த்தபோது தனசேகர் கிருஷ்ணனை கன்னத்தில் மாறி மாறி அறைந்து கொண்டிருந்ததாகவும், அவருடன் வந்த குப்புசாமி கிருஷ்ணனை பார்த்து உனக்கு எத்தனை தடவை சொல்றது என்று தகாத வார்த்தைகளால் திட்டி கிருஷ்ணனின் நெஞ்சில் எட்டி உதைத்ததாகவும், கிருஷ்ணன் நிலை தடுமாறி தனது வீட்டின் முன்பிருந்த சாக்கடையில் இடது கையை ஊன்றி கீழே விழுந்து விட்டதாகவும், அதில் அவருக்கு இடது கை மணிக்கட்டு அருகே பலத்த காயம் ஏற்பட்டதாகவும் அப்போது குப்புசாமி அருகில் கிடந்த கட்டையை எடுத்து கிருஷ்ணனுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அப்போது தனசேகரனின் அப்பா மாடசாமி ஓடி வந்து கட்டையை குப்புசாமியிடம் இருந்து பிடுங்கிக் கொண்டதாகவும், மேற்படி சம்பவங்கள் அனைத்தையும் நானும், எனது கணவரும் நேரில் பார்த்ததாகவும், பின்னர் கிருஷ்ணனை அவரது அப்பா சிகிச்சைக்காக அந்தியூர் அரசு மருத்துவமனை அழைத்துச் சென்றதாகவும், அங்கிருந்து பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை Ex.P6 through Pw5**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.04 19:09:50 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

CC No. 127/2024 Crime No. Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2-சொக்கன் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of November 2025 | | | |

**1ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தோட்டக்குடியாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் தனசேகரன் மற்றும் குப்புசாமி இருவரையும் எனக்கு தெரியும். எதிரி தனசேகர் எங்களது ஊரைச் சார்ந்தவர். எதிரி குப்புசாமி எதிரி தனசேகரனின் உறவினர் ஆவார். அ.சா.1 கிருஷ்ணன் எனது மைத்துனர் ஆவார். மாதம் நினைவில்லை கடந்த 2024 ஆம் வருடம் , 15-ம் தேதியன்று இரவு சுமார் 11.00 மணியளவில் நான் எனது வீட்டில் எனது மனைவியுடன் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்தபோது அ.சா.1 ன் வீட்டில் இருந்துதான் சத்தம் வந்ததாக தெரிந்தது. அங்கு சென்று விசாரித்தபோது எதிரிகள் இருவரும் அங்கு வந்து அ.சா.1 உடன் பிரச்சினை செய்து சென்று விட்டதாக அ.சா.1 ன் அப்பா என்னிடம் கூறினார். நான் மேற்படி சம்பவங்கள் எதையும் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 15.09.2024 ஆம் தேதியன்று கிருஷ்ணன் வேலை முடித்து வீட்டிற்கு வந்து கழிவறை செல்ல ஏரிக்கரைக்கு சென்றபோது எதிரிகள் இருவரும் கிருஷ்ணனை வழிமறித்து நீ இந்த வழியாக வரக்கூடாது என்று வாய் தகராறு செய்ததாகவும், பின்னர் அதற்கு கிருஷ்ணன் இது பொது வழி தான் நீங்கள் யார் வரக்கூடாது என்று கூறுவதற்கு என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்து

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.04 19:09:58 +0530

விட்டதாகவும், பின்னர் அன்றைய தினம் இரவு சுமார் 11- 1/4 மணியளவில் கிருஷ்ணன் தனது வீட்டிற்கு வெளியே மின்விளக்கு எரிந்து கொண்டிருந்த மின் கம்பத்தின் அருகில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது அங்கு வந்த எதிரி தனசேகர் அவரை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், சத்தம் கேட்டு நானும், எனது மனைவி ம் மற்றும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் அங்கு சென்று பார்த்தபோது தனசேகர் கிருஷ்ணனை கன்னத்தில் மாறி மாறி அறைந்து கொண்டிருந்ததாகவும், அவருடன் வந்த குப்புசாமி கிருஷ்ணனை பார்த்து உனக்கு எத்தனை தடவை சொல்றது என்று தகாத வார்த்தைகளால் திட்டி கிருஷ்ணனின் நெஞ்சில் எட்டி உதைத்ததாகவும், கிருஷ்ணன் நிலைதடுமாறி தனது வீட்டின் முன்பிருந்த சாக்கடையில் இடது கையை ஊன்றி கீழே விழுந்து விட்டதாகவும், அதில் அவருக்கு இடது கை மணிக்கட்டு அருகே பலத்த காயம் ஏற்பட்டதாகவும், அப்போது குப்புசாமி அருகில் கிடந்த கட்டையை எடுத்து அ.சா.1 க்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அப்போது தனசேகரனின் அப்பா குமாரசாமி சாந்தி (எ) தனலட்சுமியும் ஓடி வந்து கட்டையை குப்புசாமியிடம் இருந்து பிடுங்கிக் கொண்டதாகவும், மேற்படி சம்பவங்கள் அனைத்தையும் நானும், எனது மனைவியும் நேரில் பார்த்ததாகவும், பின்னர் கிருஷ்ணனை அவரது அப்பா சிகிச்சைக்காக அந்தியூர் அரசு மருத்துவமனை அழைத்துச் சென்றதாகவும், பின்னர் அங்கிருந்து பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.04 19:10:05 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

CC No. 127/2024 Crime No. Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1-கிருஷ்ணன் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of November 2025 | | | |

**1ம் எதிரி ஆஜர் இல்லை. 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தோட்டக்குடியாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். 1ம் எதிரி தனசேகரை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்காரர். 2 ம் எதிரி குப்புசாமியை சம்பவத்தன்று தான் எனக்கு தெரியும். 1ம் எதிரி இன்று ஆஜர் இல்லை. நான் தினமும் காலை கடனை கழிப்பதற்காக எங்கள் ஊரில் உள்ள ஏரியின் வழியாகத்தான் செல்வேன் கடந்த 16.08.2024 காலையில் நான் காலைக்கடன் கலைப்பதற்காக ஏரி வழியாக சென்று கொண்டிருந்தேன். எதிரி தனசேகரின் வீடும் ஏரிக்கரையின் வழியாகத்தான் உள்ளது. அவர் வீட்டிற்கு அருகில் மற்ற மூன்று வீடுகள் உள்ளது. தனசேகரின் பக்கத்து வீட்டுக்காரர் நாய் வைத்துள்ளார்.

சம்பவத்தன்று நான் ஏரிக்கரைக்கு செல்லும்பொழுது 1ம் எதிரி தனசேகரனுக்கு பக்கத்து வீட்டுக்காரரான அங்கமுத்துவின் நாய் என்னை கடிக்க வந்தது. அப்போது நான் அங்கமுத்துவிடம் நாய் கடிக்க வருகிறது, அதனால் நாயை கட்டி வையுங்கள் என்று கூறினேன். அதற்காக தான் நாயை கட்ட முடியாது என்றும் என்னை அந்த வழியாக வர வேண்டாம் என்றும் கூறினார். அதற்கு நான் பொதுத்தடத்தின் வழியாகத்தான் நான் செல்கிறேன், ஏன் என்னை பொதுத்தடத்தின் வழியாக செல்ல வேண்டாம் என்று கூறுகிறாய் என்று அங்கமுத்துவிடம் கேட்டேன். அப்போது 1ம் எதிரி தனசேகரும், அவரது தந்தை மாடசாமியும் என்னை தகாத வார்த்தைகளால் திட்டி அந்த வழியாக நான் வரக்கூடாது என்று கூறினார்கள். அதற்கு நான் பொதுத்தடத்தின் வழியாகத்தான்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.04 19:10:18 +0530

வருகிறேன். என்னை ஏன் பொதுத்தடத்தில் வர வேண்டாம் என்று கூறுகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கும்போதே 1 ம் எதிரி தனசேகர் அவரது கையால் எனது இடது கன்னத்தில் அடித்து விட்டார்.

பின்னர் நான் அங்கிருந்து எனது வீட்டிற்கு சென்று விட்டேன். அப்போது எதிரிகள் இருவரும் குடிபோதையில் என்னை துரத்திக் கொண்டு எனக்கு பின்னால் எனது வீட்டிற்கு வந்தார்கள். அவர்களுடன் தனசேகரனின் அப்பாவும் வந்தார். அங்கு வந்த 2ம் எதிரி குப்புசாமி என்னை காலால் நெஞ்சின் மீது எட்டி உதைத்து கீழே தள்ளினார். அதில் எனக்கு இடது கை உடைந்து விட்டது. பின்னர் நீதிமன்றத்தில் உள்ள தடியால் 2ம் எதிரி குப்புசாமி என்னை அடிக்க வந்தார். அப்போது தனசேகரனின் அப்பா அந்த தடியை பிடுங்கி சென்று விட்டார்.

எதிரி தனசேகர் அவரது வீட்டிற்கு அருகில் பொது இடத்தில் வைத்து என்னை காலால் உதைத்தார். பிறகு அந்த இடத்திற்கு வந்தால் என்னை வெட்டி விடுவேன் என்று எதிரிகள் என்னை மிரட்டினார்கள். மேற்படி சம்பவங்களை எனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் சின்னத்துரை என்பவர் பார்த்தார். எனக்கு வலி அதிகமாக இருந்ததால் எனது அப்பா என்னை முதலில் அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

பின்னர் அங்கிருந்து என்னை ஈரோடு பெருந்துறை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு செல்லுமாறு பரிந்துரைத்தார்கள். மருத்துவரின் பரிந்துரையின் பேரில் நான் ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் உள்ள தடி அ.சொ.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** .வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் எதிரி ஆஜர். 1ம் தேதி ஆஜர் இல்லை. 1ம் எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை**

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.04 19:10:25 +0530

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.04 19:10:32 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.